**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி II - 2020**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி II இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஜ மற்றும் 3484 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் (Agence Francaise De Development) இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 17 ஆம் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரையின் 3.4.4 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

நிகழ்ச்சித்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மின்வலு, எரிசக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மின்வலு அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. நிலையான முறைமை செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு அதிகரித்த மின்வலு தேவையை உள்வாங்குதல் மற்றும் மின்வலு முகாமைத்துவத்தை மீளசெயற்படுத்துல் என்பவற்றிற்கு மின்விநியோக உப நிலையங்கள் மற்றும் அதனுடன் இணைந்த வரிசைகளின் நிர்மாணத்துடன் நாட்டில் பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 39,453 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 264.7 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,793 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 184.7 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சைஸ் டி டெவலப்மென்ட் இனால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் 2 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா (மில்லியன்) | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கடன் பெறுவனவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒன்பது மோட்டார் வாகனங்கள் தனித்தனியாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக, நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தன. மேலும் அவற்றின் பெறுமானத்தேய்வு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 40.03 | செயற்திட்டம் இன்னும் மூலதனமாக்கப்படாத தால் வாகனங்கள் மூலதனமாக்கப்படவி ல்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,803 மில்லியன் தொகையான உரிமைகோரல்கள் மீளப்பெறப்பட்டிருந்தன. எனினும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்படும் ஏடுகளின் பிரகாரம் தொடர்புடைய பெறுமதி ரூபா 1,595 மில்லியன் ஆகும். இவ் இனங்காணப்படாத வேறுபாட்டிற்கான விளக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 208.5 | Pkg 04 K இற்கான CLK 1022 01 உடன்படிக்கைக்காக தொடர்புடைய நேரடி கொடுப்பனவுகள் ERD கூற்றில் பதிவு செய்யப்பட்டு ஏறத்தாழ 5 மில்லியன் வேறுபாட்டிற்காக கணக்கிணக்கம் பேணப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தகவல்கள் தொடர்புடைய ஏடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | தேறிய அந்நிய செலாவணி இலாபமானது நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழ் தனித்தனியாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக வட்டியுடன் கூடிய கடனின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 292.16 | குறித்துக் கொள்ளப்பட்டது. | அந்நிய செலாவணி இலாபம் தனித்தனியாக காட்டப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2016 யூன் 10 ஆம் திகதிய 2/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | சுற்றறிக்கையால் அறிவுறுத்தப்பட்டவாறு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உள்ளக கணக்காய்வாளர் CEB இல் நியமனம் செய்யப்படுவதில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் அமுல்ப்படுத்தல் முகவரால் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்ந்து மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பின்பற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்ட வழிகாட்டல் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்டப் பணிகள் பட்டியலிடப்பட்ட திகதியான 2016 யூலை 31 தொடக்கம் 2 ஆண்டுகளுக்கும் மேலான தாமதத்துடன் தொடங்கப்பட்டிருந்தன. ஆகையால் விலை மாற்றங்கள், கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்டக் காலத்தை நீடித்தல் போன்ற ஒப்பந்தங்களில் மேலதிக கிரயங்கள் ஏற்படும் அபாயம் காணப்பட்டது.

| இல. | கூறுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **எரிசக்தி வினைத்திறனிற்காக தேவை-பக்க முகாமைத்துவம்**<br><br>நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் சிமார்ட் வலையமைப்புக்கள் மற்றும் அளவீட்டு ஆலோசனை சேவைகளுக்கான ஒப்பந்தம் ரூபா 1,617.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.1 மில்லியன் கிரயத்தில் அமுல்ப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் இது 2021 யூலை 26 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனையாளர் ஒருவரின் சேவைகளைப் பயன்படுத்தாமல் வெவ்வேறு செயற்திட்ட அமலாக்கல் உத்திகளுடன் ஒரே அளவிலான பணி நோக்கெல்லை அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட்டு இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **நடுத்தர மின்னழுத்த வலையமைப்பு வினைத்திறனை மேம்படுத்துதல்** | | |
| (i) | செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் பல்வேறு காரணங்களால், பெலிகஹ மற்றும் எதுல்கோட்டை ஆரம்ப உப மின்நிலையத்தைப் விரிவுபடுத்துதல் மற்றும் இரத்தினபிட்டியவில் ஆரம்ப உப மின்நிலையத்தை நிர்மாணித்தல் என்பவற்றிற்கான பெறுகை செயன்முறை, பொருத்தமான ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்வதற்கு 3½ ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2020 யூலை 8 இல் ஐ.அ.டொலர் 7.973 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 2020 செப்தெம்பர் 21 இல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இரத்தினபிட்டியவில் இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட காணி 2021 யூலை 26 வரை உரிய நோக்கத்திற்காக சுவீகரிக்கப்பட்டிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சட்டமா அதிபர் திணைக்களத்தால் அங்கீகாரம் வழங்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடன் நடைமுறைக்கு வரும் திகதி 06 மாதங்கள் தாமதமாகியிருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் பொதி-4 இன் கீழ் 33kv tower lines and gantries ஐ நிர்மாணிப்பதில் 42.18 மற்றும் 16.5 சதவீத குறைவான பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும், 211 கோபுரங்களில், 56 கிலோமீற்றர் நீளமான கோபுர வரிசையின் கீழ் 113 கோபுரங்கள் மாத்திரமே அத்திவாரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்தவொரு கட்டுமானப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 16.5% நிதி செயன்முன்னேற்றத்திற்கான காரணம், திட்டமிடப்பட்ட அட்டவணையின் பிரகாரம் கோபுரங்கள், இன்சுலேட்டர்கள், கண்டக்டர்கள் (Insulators, conductors) போன்றவற்றுக்கான உபகரண வழங்கல்கள் 2021 ஆம் ஆண்டிற்குள் விநியோகிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அடித்தள வேலைகளுக்கான கொடுப்பனவுகள் மாத்திரமே 2020 இற்குள் செயன்முறைப்படுத்தப்பட்டன. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்** | | |
| (i) | பொதி 1 இன் கீழ் பொல்பிட்டியவில் இருந்து அம்பாந்தோட்டை வரையிலான 144 கிலோமீற்றர் தூரத்திற்கு மின்சார பரிமாற்ற வரிசைளை அமைப்பதிலும், 132/32 kv அம்பாந்தோட்டை மின்விநியோக | அம்பாந்தோட்டை GSS 220kV இன் அபிவிருத்தி 2018 திசெம்பர் 04 இல் நடைமுறைக்கு வந்திருந்ததுடன் 2020 திசெம்பர் 02 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உப நிலையத்தை நிர்மாணிப்பதிலும் பௌதீக செயன்முன்னேற்றம் 61 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் மற்றும் 43 சதவீத நிதி செயன்முன்னேற்றம் என்ற இலக்கை விட பின்தங்கியிருந்தன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 452 கோபுரங்களில், 208 கோபுரங்கள் அத்திவாரம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 71 கோபுரங்களின் கட்டுமானப் பணிகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. பணிகளின் மெதுவான முன்னேற்றம் காரணமாக, ஒப்பந்த காலப்பகுதி 2021 சனவரி 23 முதல் 2021 செப்தெம்பர் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பொறி மற்றும் கட்டாய உதிரிப் பாகங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து சோதனையிட்டு கட்டளையிடும் பொறியியலாளர்களின் வருகை என்பன உலகம் முழுவதும் பரவியுள்ள கொவிட்-19 காரணமாக தாமதமாகியிருந்ததுடன் செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் இரண்டையும் இது பாதித்திருந்தது. | |
| (ii) | 2016 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் பரிமாற்ற உப நிகழ்ச்சித்திட்டத்தின் பொதி 2 இன் கீழ் ஐ.அ.டொலர் 3.21 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் ஹபரணையிலிருந்து வாழைச்சேனை வரையிலான 100 கிலோமீற்றர்கள் வழங்கப்பட வேண்டியிருந்தது. பல்வேறு காரணங்களினால் வரைவு கேள்வி ஆவணங்களுக்கான நியம அமைச்சரவை நியமித்த பெறுகை குழு மற்றும் ADB இடமிருந்து அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. மேலும், பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 9.5 சதவீதம் மற்றும் 12 சதவீதம் ஆக காணப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 20 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிர்மாண வேலை 2020 ஏப்ரல் 30 இல் தொடங்கப்பட்டிருந்தது. | ஹொரண பாதுக்க மற்றும் ஹபரணை வாழைச்சேனை ஆகிய இரண்டும் AFD கடன் மூலம் நிதியளிக்கப்படுகின்றன. AFD கடன் 2019 மே மாதத்திலேயே நடைமுறைக்கு வந்தது. அதற்கிணங்க இரண்டு ஒப்பந்தங்களும் 2019 யூன் மாதத்தில் வழங்கப்பட்டன. எனினும், ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் அதே வேளையில் ஹபரன வாழைச்சேனை ஒப்பந்தம் 2019 நவம்பர் முதல் நடைமுறைக்கு வந்திருந்தது. ஹொரண பாதுக்க ஒப்பந்தம் 2020 ஏப்ரல் 30 இல் நடைமுறைக்கு வந்திருந்தது. | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | பரிமாற்ற உட்கட்டமைப்பை மேம்படுத்தும் கூறின் கீழ் நடுக்குடா மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் மின்விநியோக உப நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2020 மார்ச் மாத இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ் வேலைகள் பூர்த்தி | நடுக்குடா GSS செயற்திட்டத்தின் நிர்மாணம் 2018 மார்ச் 16 முதல் நடைமுறைக்கு வந்திருந்ததுடன் 2020 திசெம்பர் 15 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கொவிட்-19 பரவலின் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக | பணிகளை விரைவுபடுத்துவதற்கும் ஒப்பந்ததாரர்களின் பணிகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்காததுடன் 2020 திசெம்பர் 31 இல் இது 88 சதவீத பௌதீக மற்றும் 82 சதவீத நிதி செயன்முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியிருந்தன. | வெளிநாட்டில் இருந்து OEM பரிந்துரைத்த கட்டளையிடும் நிபுணர்களை வரவழைக்க முடியாதிருந்ததால், இதனை செயற்படுத்துவது தாமதமாகியிருந்தது. | |
| (iv) | பொதி 3 இன் கீழ் கொழும்பு C - கொலன்னாவ 132kv 800sqmm கேபிளிலிருந்து கொழும்பு B மின்விநியோக உப நிலையங்களின் தனியான உள்ளக மற்றும் வெளியக இணைப்புக்களின் நிர்மாணம் மற்றும் கொழும்பு C & கொலன்னாவ GSS இன் விரிவுபடுத்தல் என்பவற்றின் நிர்மாண வேலைகள் 2019 ஒக்தோபர் 15 இல் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் 14 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தன. எனினும் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 44.5 சதவீதம் மற்றும் 16 சதவீதம் ஆக காணப்பட்டன. | கொழும்பு B மின்விநியோக உப நிலையத்தின் நிர்மாணம் 2018 திசெம்பர் 10 இல் வழங்கப்பட்டது. எனினும், SL அரசாங்கத்திற்கும் CEB இற்கும் இடையிலான துணைக் கடன் உடன்படிக்கை 2019 மே 3 இல் கைச்சாத்திடப்பட்டது, இதனால் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. எனவே, ஒப்பந்த உடன்படிக்கை 2019 யூலை 2 இல் கைச்சாத்திடப்பட்டதுடன் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதி 2019 ஒக்தோபர் 15 ஆக காணப்பட்டது. | ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படும் பணிகளை கண்காணித்து மேற்பார்வை செய்தல் தொடர்பாக உறுதியானதும் வினைத்திறனானதுமான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (v) | கொட்டுகொட, கொலன்னாவ, ஹொரண, பாதுக்க, தெஹிவளை மற்றும் மாதம்பே மின்விநியோக உப நிலையங்களின் விரிவுபடுத்தல் ஒக்தோபர் 22 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம் முறையே 65.5 சதவீதம் மற்றும் 84 சதவீதமாக காணப்பட்டன. | செயற்திட்டம் 2018 ஒக்தோபரில் தொடங்கப்பட்டதுடன் 2020 ஒக்தோபரில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2020 மார்ச்சில் தொடங்கிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை சிவில் வேலைகளில் குறிப்பிடத்தக்க தாமதங்களை ஏற்படுத்தியிருந்தது. | ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்படும் பணிகளை கண்காணித்து மேற்பார்வை செய்தல் தொடர்பாக உறுதியானதும் வினைத்திறனானதுமான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 37.89 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 13.38 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92 மில்லியன் தொகை மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் ADB SRI 3484/3483 கடன் 2017 சனவரியில் நடைமுறைக்கு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் 2017 யூலை மாதத்திலேயே நடைமுறைக்கு | நிகழ்ச்சித்திட்ட நிர்வாக கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இறுதியில் ரூபா 37.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 259.9 மில்லியன் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அத் திகதியில் உள்ளவாறு உரிய இலக்குகளில் 35 சதவீதம் மாத்திரமே அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மெதுவாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, ரூபா 79.45 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன் வழங்கும் முகவர் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | வந்திருந்தது. யுகுனு கடன் 8313 மே 2019 இல் மட்டுமே நடைமுறைக்கு வந்தது. மேலும், ஆரம்ப சுற்றாடல் அனுமதி மற்றும் நில அளவைகளிற்கு சிறிது நேரம் எடுத்திருந்தது. | |

## 3.3 வழமைக்கு மாறான செயற்பாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் பெறுவனவுகளில் 2016 முதல் 2020 வரையான காலப்பகுதியின் போது ரூபா 218.97 மில்லியன் கிரயத்தில் நிகழ்ச்சித்திட்டம் கொள்வனவு செய்திருந்த 35 மோட்டார் வாகனங்கள் நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் 35 மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் ஒப்பந்ததாரர்களின் பெயரில் காணப்பட்டது. மேலும், அந்தந்த மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவத்தை அமுல்படுத்தல் முகவரிற்கு மாற்றுவதற்கும் அதன் தரவுத்தளத்தை பேணுவதற்கும் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | குறித்த காலப்பகுதியின் போது 35 மோட்டார் வாகனங்கள் ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அந்த வாகனங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளும் நடைமுறை வேலை கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன. சொத்து இனங்காணப்படும். | இலங்கை மின்சார சபையினால் ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைப்பதற்கு ஒப்பந்த ஆவணங்களின் உட்பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 பிரதான கூறுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து கண்காணித்தல் இலங்கை மின்சார சபையின் 03 தனித்தனி பிரதேச தலைவர்களின் முன்னோட்டத்தின் கீழ் இருந்தது. | அனைத்து செயற்திட்டக் கூறுகளுக்கும் CEB மற்றும் பணிப்பாளர் சபையால் மாதாந்த செயன்முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மின்சக்தி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் திறைசேரியின் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு ஆகியவற்றால் செயற்திட்ட செயன்முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் செயற்திட்ட பணிப்பாளர் ஒருவரின் கீழ் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |